## 2.17 2006–2007ம் ஆண்டிற்கான திட்ட செயலாக்கத்தில் கட்டாயப் பணிகள் மற்றும் மேற்கொள்ளக் கூடாத பணிகள் தொகுக்கப்பட்டு திருத்திய வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடுதல்

---

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மா அதி2) துறை

அரசாணை (நிலை) எண்.84 நாள் : 25.7.2006

படிக்க :

1. அரசாணை (நிலை) எணா.75 ஊரக வளர்ச்சி (மதி1)த் துறை, நாள் 19.6.2002
2. அரசாணை (நிலை) எண்.120 ஊரக வளர்ச்சி (மதி1)த் துறை நாள் 29.7.2004
3. அரசாணை (நிலை) எண் 116 ஊரக வளர்ச்சி (மதி1)த் துறை, நாள் 18.8.2005
4. அரசாணை (நிலை) எண்.157 ஊரக வளர்ச்சி (மதி1)த் துறை, நாள் 24.11.2005
5. ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.64348/2006/என்இடி எம்–3 நாள் 17.6.2006.

**ஆணை**

அரசாணை (நிலை) எண்.75 ஊரக வளர்ச்சி (மதி1)த் துறை, நாள் 19.6.2002ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பணிகளை முன்மொழிவு செய்வதற்கான வரையறைகளும் மேலும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளத்தக்க பணிகள் மற்றும் இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக் கூடாத பணிகள் என பட்டியலிட்டும் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் கட்டாயமாக எடுத்துச் செய்யும் வகையில் குறிப்பிட்ட சில பணிகளை அரசு முன்னுரிமைப்படுத்தியுள்ளது.

2. 2004–2005ம் ஆண்டுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் சில திருத்தங்களுடன் அரசாணை (நிலை) எண்.120 ஊரக வளர்ச்சி (மதி1)த் துறை நாள் 29.7.2004ல் வெளியிடப்பட்டன.

3. அரசாணை (நிலை) எண்.116 ஊரக வளர்ச்சி (மதி1)த் துறை, நாள் 18.8.2005 ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் முன்னுரிமை பணிகளின் கீழ் குறுப்பிடப்பட்டுள்ள நமது கிராமம், கிராம ஊராட்சிகளில் சிமெண்ட் சாலைகள் அமைத்தல் தொகுப்பு வீடுகள் பழுது பார்த்தல் போன்ற பணிகள் மாநகராட்சி மற்றும் நகர்புறங்களை மட்டும் கொண்ட தொகுதிகளில் மேற்கொள்ள இயலாது என்பதால் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் அவ்வாணையில் குறிப்பிடப்பட்டவாறு மாற்றுப் பணிகளைச் செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

4. அரசாணை (நிலை) எண்.157 ஊரக வளர்ச்சி (மதி1)த் துறை நாள் 24.11.2005 ல் 2005–2006ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி ஒதுக்கத்தில் முன்னுரிமைப் பணிகளுக்கான ஒதுக்கீட்டினை மாற்றி அமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளன.

5. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.1 கோடி நிதியில் வரையறுக்கப்படாத நிதி ரூ.40 லட்சம் நீங்கலாக எஞ்சியுள்ள ரூ.60 லட்சம் நிதியினை 24.5.2006 அன்று சட்டப் பேரவையில் மேதகு அளுநர் அவர்களின் உரையின் போது அரசின் முன்னுரிமைகளாக பிரதிபலிக்கப்பட்ட சிமெண்ட்/ கான்கிரீட் சாலைகள், தார் சாலைகள் மற்றும் சோடியம் விளக்குகள் அமைத்திட பயன்படுத்தலாம் என்பதற்கிணங்கவும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட வழிகாட்டு நெறிமுறையின் கீழ் மேற்கொள்ளக் கூடாத பணிகளின் பட்டியலும், வழிகாட்டு நெறிமுறைகளுக்குத் தக்க திருத்தம் வெளியிடுவது குறித்தும் ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர் படிக்கப்பட்டவை ஐந்தில் காணும் தனது கடிதத்தில் முன்மொழிவுகளை அனுப்பியுள்ளார்.

6. ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவுகளை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. 2006–2007 ஆண்டுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட செயலாக்கத்துக்கு என ஒதுக்கப்பட்டுள்ள ரூ.1கோடி நிதியில் கீழ்கண்டவாறு கட்டாயப் பணிகளாக எடுத்துச் செய்யவும், மேலும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளக்கூடாத பணிகள் எனவும் பட்டியலிட்டு வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படுகின்றன.

கட்டாயப்பணிகள்

| வ.எண் | வேலையின் விவரம் | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒதுக்கீடு சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | சிமெண்ட் /கான்கிரீட் சாலை | 25 | 25 |
| 2 | சோடியம் விளக்குகள் | 15 | 15 |
| 3 | கப்பிச்சாலைகளை தார்சாலையாக உயர்த்துதல் | 20 | 20 |
| 4 | வரையறுக்கப்படாத நிதி | 40 | 40 |
| 5 | மொத்தம் | 100 | 100 |

தடைசெய்யப்பட்ட பணிகளின் பட்டியல்

1. மத்திய மாநில அரசுத்துறைகள், அரசு நிறுவனங்கள் / அமைப்புகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் இவற்றின் அலுவலக கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள்
2. தனியார், கூட்டுறவு மற்றும் வியாபார நிறுவனங்களின் அலுவலகம் மற்றும் வசிப்பிடக்கட்டிடங்கள்
3. அனைத்து வணிக நிறுவனங்கள் /அலகுகள் குறித்த பணிகள்
4. அனைத்து வகையான அனைத்து பராமரிப்புப் பணிகள்
5. இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அனுமதியுடன் நிறைவேற்றப்படும் புனரமைப்புப்பணிகள் மற்றும் புராதன மற்றும் தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் பராமரிப்பு பணிகளைத் தவிர்த்து அனைத்து புனரமைப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிகள்
6. மான்யம் மற்றும் கடன், மற்றும் மத்திய மற்றும் மாநில / யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்
7. எந்த ஒரு தனி நபர் பெயரிலும் சொத்து உருவாக்குதல்
8. மாநில மற்றும் தல சுயாட்சி நிறுவனங்களில் மருத்துவமனை, கல்வி, விளையாட்டு, குடிநீர் மற்றும் சுகாதார நோக்கங்களுக்காக வாகனங்கள் நில ஊர்திகள் மற்றும் தளவாடங்களைத்தவிர இதர அசையும் பொருட்களை கொள்முதல் செய்தல் (இப்பிரிவின் கீழ் முன்மொழியப்படும் மூலதனப்பணிகளில் இப்பணிகள் 10 சதவிதத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்)
9. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத்தொகை வழங்குவது.
10. பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச்செலுத்துதல்
11. தனி நபர்/குடும்ப பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்
12. அனைத்து வரவினம் மற்றும் தொடர் செலவினங்கள்
13. மத தொடர்பான வழிபாட்டு இடங்களில் பணிகள்/மத சார்புடைய குழுக்களுக்கு சொந்தமான இடங்களின் பணிகள்

7. ஏற்கனவே உள்ள நடைமுறையின்படி மேலே பத்தி 6ல் குறிப்பிடப்பட்ட கட்டாயப்பணிகளை மேற்கொள்ள வேண்டிய குடியிருப்புகள் மற்றும் கிராமங்களை முன்மொழியும் அதிகாரம் தொடர்புடைய சட்டமன்ற உறுப்பினருக்கு அளிக்கப்படுகிறது. மீதமுள்ள ரூ. 40 லட்சத்தில் 7மேலே பத்தி 6–ல் குறிப்பிடப்பட்ட தடை செய்யப்பட்ட பணிகளை தவிர சட்டமன்ற உறுப்பினர் மேற்கொள்ள வேண்டிய பணிகளை முன்மொழிவு செய்யலாம். இதே நடைமுறை முந்தைய ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர்களால் பணிகள் முன்மொழிவு செய்யப்பபடாதால் எஞ்சியுள்ள நிதி அல்லது முன்மொழிவு செய்யப்பட்ட பணிகளில் நிர்வாக அனுமதி வழங்கப்படாத பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கும் பொருந்தும்.

8. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே தடைசெய்யப்பட்ட பயணியர் நிழற்குடை, மழைநீர் வடிகால் மற்றும் பள்ளிகள் மருத்துவமனைகளுக்கான சுற்றுச்சுவர் போன்றவற்றை எடுத்துச் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. 1991ம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளை (ஒட்டு வீடுகள்) பழுது பார்ப்பது கடந்த வருடம் வரையறுக்கப்பட்ட பணியாக இருந்தது, நடப்பு ஆண்டு முதல் 10 வருடங்களுக்கு

## 2. MLACDS

மேற்பட்ட தொகுப்பு வீடுகளை பழுதுபார்க்கும் பணிகளை, வரையறுக்கப்படாத 40 சதவிகித நிதி ஒதுக்கீட்டிலிருந்து, விரும்பினால் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.

**9.** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில், மாநகராட்சிப் பகுதியில் அடங்கியுள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் 60% நிதியை தெருவிளக்கு, சாலைவசதி, கழிப்பறைகள் கட்டுதல், குடிநீர் வசதி போன்ற அடிப்படை பணிகளை மேற்கொள்ள பரிந்துரைக்கவும் அனுமதிஅளித்து அரசு ஆணையிடுகிறது

**10.** இந்த ஆணை நிதித்தறையின் அ.சா.எண் 43438/RD/2006, நாள் 24.7.2006ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்